# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

**C.C. No. 127/2018**

**வழக்கு சாட்சி – அ.சா. 6**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | காமுத்துரை | ஜாதி | |
| தந்தை பெயர் | மாரியப்பன் | தொழில் | கொத்தனார் |
| கிராமம் | கோடாங்கிபட்டி | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | தேனி | வயது | 42/25 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07.03.2025.

**(2 வது எதிரி ஆஜர். 1 வது எதிரி இறந்துவிட்டார். 3, 4, 5, 6 ஆகிய எதிரிகள் ஆஜர் இல்லை. அவர்களுக்க U/s.355 BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை:–**

அசா1 சென்றாயனை எனக்குத் தெரியும். எதிரிகள் எனது உறவினர்கள். தேதி, மாதம் தற்போது ஞாபகம் இல்லை. சுமார் 5–6 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் எதிரிகளுக்கும், அசா 1ற்கும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக பிரச்சனை நடந்தது என்று சொன்னார்கள். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி விடுத்த வேண்டுகோளை ஏற்று சாட்சி குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

கடந்த 27.09.2017 அன்று காலை 7.15 மணிக்கு சென்றாயன் வீட்டில் சத்தம்கேட்டது என்றும், அங்கு சென்று பார்த்தபோது எதிரிகள் சென்றாயன் மற்றும் அவரது அம்மாவைப்பார்த்து அசிங்கமாக பேசி சென்றாயனின் அம்மா லோகுமணியை கையைப்பிடித்து இழுத்து, அடித்து வீட்டைவிட்டு

வெளியே தள்ளிவிட்டார்கள் என்றும், மேலும் சென்றாயனையும், அவரது அழகர்சாமியையும் அடித்து வீட்டை எழுதிக்கொடு  என்று மிரட்டினார்கள் என்றும், நாங்கள் சென்று விலக்கிவிட்டோம் என்று எதிரிகள் சென்றாயன் மற்றும் அவரது அம்மா, அப்பாவை பார்த்து உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகள் உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.